## <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

**<u>OS.No. 120/2015</u>**

பெயர் : சந்திரா                வா.சா : 1

த/க/பெயர் : லட்சுமணன்                தேதி : 18.03.2026

வா.சாட்சி – 1 ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு.கோ.ஜெகதீசன், இரண்டாம் நிலை இருக்கை எழுத்தர் என்பவரால் ஆணையிட்டுபிரமாணம் வாங்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:–</u>**

**1.** என்ன பரிகாரம் கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய பங்கு எனக்கு வேண்டும் என்று கூறி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். ஆறில் ஒரு பங்கை எனக்கு பிரித்து கொடுக்க வேண்டும் என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து மரப்பரை கிராமத்தில் உள்ளது. சர்வே நம்பர் 354 ஆகும். 3 ஏக்கர் 72 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய அப்பா பெயர் கந்தசாமி. என்னுடைய தாயார் பெயர் காளியம்மாள். என்னுடைய பெற்றோருக்கு நாங்கள் மூன்று பெண் குழந்தைகள் ஆகும் நல்லம்மாள், முத்தாயி கடைசியாக நான் சந்திரா ஆவோம். என்னுடைய சகோதரிகளான நல்லம்மாள் மற்றும் முத்தாயிஆகியோர் இவ் வழக்கில் நான்கு மற்றும் ஐந்தாம் பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான்.

2. இவ்வழக்கில் ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகளான சுப்பிரமணி, பழனிசாமி மற்றும் குழந்தைவேல் ஆகியோர் எங்களுடைய அத்தை மகன்கள் ஆவார்கள். மேற்படி ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகளுடைய பெற்றோர்களின் பெயர் முத்துசாமி மற்றும் தங்காயி ஆகும். முதல் மூன்று பிரதிவாதிகள் மற்றும் அவர்களுடைய பெற்றோர்கள் ஆகியோர் சேர்ந்து என் மீதும் என்னுடைய தாயார் காளியம்மாளுக்கும் மற்றும் என்னுடைய சகோதரிகளும் இவ்வழக்கின் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 189/1992 இல் தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அவ்வழக்கில் தாவா சொத்தானது ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள் மற்றும் அவர்களுடைய பெற்றோருக்கு பாத்தியப்பட்டது என்று தீர்ப்பு

பகரப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் பெயரில் நானும் என்னுடைய அம்மாவும் சார்பு நீதிமன்றம் நாமக்கல்லில் மேல்முறையீட்டு வழக்கு எண் 115 /2002 தாக்கல் செய்தோம் என்றால் சரிதான்.

3. மேல்முறையீட்டு வழக்கில் என்னுடைய சகோதரிகள் ஆனா நல்லம்மாள் ஆகியோர்களை எதிர் தரப்பினராகவும் காண்பித்து வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி முதல் மேல் முறையீட்டு வழக்கு 115/2002 பெயரில் 1 முதல் 3 பிரதிவாதிகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு எண் 1606/2008 தாக்கல் செய்து அது இன்றைய தினம் வரை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல தள்ளுபடி ஆகிவிட்டதாக கூறினார். நான் தள்ளுபடி ஆகிவிட்டது என்று சாட்சியம் அளிப்பது தவறு என்றாலும் மேற்படி தள்ளுபடி உத்தரமானது இடைக்கால மனு எண் 11586/2023 படி 13.03.2025 ஆம் தேதி அன்று நீக்குரவு செய்யப்பட்டு விட்டது என்றாலும் தற்பொழுது இரண்டாவது மேல்முறையீடு நிலுவையில் உள்ளது என்றாலும் சரியல்ல.

**( 3 மற்றும் 6 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

ஒம்/– G. ரூபனா,
கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.